

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 316 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 13 – சனிக்கிழமை 27 ஜூன் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 316 : Thiruvalluvar Year - 2057 - Aani 13 - Saturday 27 June 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00






திருவாரூர் – காட்டூரில் அமைந்துள்ள “கலைஞர் கோட்டம்” அஞ்சுகத்தம்மையார் அரங்கில், நேற்று முன்தினம் காலை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக விவசாயத் தொழிலாளர் அணித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உ.மதிவாணனின் புதல்வர் மதி.கதிரவன் – த.மௌனிகா ஆகியோரின் திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ., கோவி.செழியன் எம்.எல்.ஏ., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா உள்பட பலரும் இம்மணவிழாவில் கலந்துகொண்டார்கள்.

## என்னை வேறெங்கேயும் தேடவேண்டாம்!

# மக்கள் மனதில் நிலையாக இருக்கிறேன்!

### திருவாரூரில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன் இல்லத் திருமண விழாவில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

**திருவாரூர், ஜூன் 27-**

**திருவாரூரில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன் இல்லத் திருமண விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது “என்னை வேறெங்கேயும் தேடவேண்டாம்; மக்கள் மனதில் நிலையாக இருக்கிறேன்” என்று கூறினார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின அவர்கள் நேற்று முன்தினம் (25.06.2026) திருவாரூர் - காட்டூரில் அமைந்துள்ள கலைஞர் கோட்டத்தில் நடைபெற்ற கழகத்தின் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உ. மதிவாணன் அவர்களின் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்கள் கதிரவன் - மௌனிகா ஆகியோரை வாழ்த்தினார்.

அதுபோது அவர் ஆற்றிய உரை வருமாறு:-

கழகத்தின் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் நம்முடைய அருமைச் சகோதரர் மதிவாணன் அவர்களின் இல்லத்தில், அவருடைய இளைய மகன் கதிரவன் - மௌனிகா அவர்களுக்கும் திருமண விழாவை நடத்தி வைத்து, அதே நேரத்தில் மணக்கோலம் கொண்டிருக்கும் மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அதற்காக நான் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவில் பங்கேற்கிறபோது, நான் பல்வேறு வகைகளில் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன். ஒன்று, மதிவாணன் இல்லத்தில் நடைபெறும் மணவிழா நிகழ்ச்சி; இரண்டாவது மகிழ்ச்சி என்ன என்றால், கலைஞர் வளர்ந்த மண்ணில் இந்த திருவாரூர் மண்ணில் நடைபெறும் மணவிழா நிகழ்ச்சி.

**கழகத்தில் படிப்படியாக வளர்ந்து வந்திருப்பவர் மதிவாணன்!**

எனவே அப்படிப்பட்ட திருவாரூரில், அதுவும் தலைவர் பெயரால் அமைந்திருக்கும் இந்த கலைஞர் கோட்டத்தில், அதையும் தாண்டி சொல்ல வேண்டும் என்றால், இந்த அரங்கம் கலைஞரை ஈன்றெடுத்த அவருடைய அன்னை என்னுடைய பாட்டி அஞ்சுகம் அம்மையார்



பெயரில் அமைந்திருக்கும் இந்த அஞ்சுகம் அரங்கத்தில் நடைபெறும் மணவிழா. எனவே நான் பல்வேறு கோணங்களில் இந்த விழாவில் பங்கேற்கிறபோது மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன்.

நான் ஏற்கனவே மதிவாணன் குடும்பத்தில் அவருடைய சகோதரர் காமராஜ் அவர்களின் மணவிழாவையும் நான் தான் நடத்தி வைத்தேன்.

நான் எண்ணிப் பார்க்கிறேன்... ஏறக்குறைய 40 ஆண்டு காலமாக அவர் இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, சிறப்பாக இந்த இயக்கத்திற்கு துணை நின்று கொண்டிருக்கிறார்.

முதன் முதலில் 1986இல் கிளைக் கழகத்தின் செயலாளராக இருந்து, மாவட்டக் கழகத்தின் பிரதிநிதியாக 1996இல் பொறுப்பேற்று, அதைத்தொடர்ந்து மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளராகவும் கடமையை நிறைவேற்றி, அதற்குப் பின்னால் ஆதிதிராவிடர் நலக்குழுவின் துணைச் செயலாளராகவும் பொறுப்பேற்று, விவசாயத் தொழிலாளர் அணியின் செயலாளராகவும் பொறுப்பேற்று, அந்த அணியின் தலைவராகவும் பொறுப்பேற்று இன்றைக்கு செயலாற்றிக் கொண்டிருக்கிறார். இப்படி படிப்படியாக வளர்ந்து வந்திருப்பவர் மதிவாணன் அவர்கள்.

கட்சிப் பணிகளில் மட்டுமல்ல, மக்கள் பணியை எடுத்துக் கொண்டாலும், 1986இல் ஊராட்சி மன்றத் தலைவராக, அதைத் தொடர்ந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக, 1996இல் ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராகப் பணியாற்றியிருக்கிறார். அதற்குப் பிறகு, 2006இல் ஐந்தாவது முறையாக நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்

> **“அப்பாவை அங்கே தேடாதீர்கள். மக்கள் மனதில் பதிந்திருக்கிறான். அது போதும். நீங்கள் தேடும் இடத்தில் நான் இருக்க மாட்டேன். மக்கள் தேடும் இடத்தில் நிச்சயமாக நான் முதல் ஆளாக நிற்பேன். நான் சட்டமன்றத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இன்றைக்கு நான் மக்கள் மன்றத்தில் இருக்கிறேன்.”**

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்தில், அவருடைய அமைச்சரவையில் பால்வளத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, அந்தப் பணியையும்


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்


---

## தமிழ்நாட்டை விரும்பிய - தமிழர்கள் விரும்பிய பிரதமர்!

# வடக்கே உதித்த ‘சமூக நீதிக்காவலர்’ வி.பி.சிங்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஜூன் 27-

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் தமிழ்நாட்டை விரும்பிய, தமிழர்கள் விரும்பிய பிரதமராகத் திகழ்ந்தார் என்றும் வடக்கே உதித்த சமூக நீதிக் காவலர் என்றும் பாராட்டியுள்ளார்.

அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**திராவிட இயக்கம் தோன்றாத வடக்கே உதித்த சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாள்!**

**இந்தியா எத்தனையோ பிரதமர்களைக் கண்டிருக்கிறது. குறுகிய காலமே அப்பதவியில் இருந்தாலும் சமூகநீதியை நிலைநாட்டுவதற்காகப் பிரதமர் பதவியையே துச்சமாகக் கருதி வி.பி.சிங் அவர்கள் காட்டிய உறுதி என்றென்றும் நாம் நினைத்துப் போற்றத்தக்கது.**

**தி.மு.க.வைப் போலவே, ‘ஆட்சியும் பதவிகளும் முக்கியமல்ல; சமூக நீதிக் கொள்கையே முக்கியம்’ என வாழ்ந்து காட்டியவர் வி.பி. சிங் அவர்கள். தமிழ்நாட்டை விரும்பிய, தமிழர்கள் விரும்பிய பிரதமராகத் திகழ்ந்தார்.**

**நெருக்கடியான சூழலிலும் தலைவர் கலைஞருக்குத் தோள் கொடுத்த உண்மையான கொள்கைத் தோழமையான அவருக்கு என் வீரவணக்கம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.




---

முதல்வர் மீது அவை உரிமை மீறல் :

# நடவடிக்கை எடுப்பாரா பேரவைத் தலைவர்?

### முன்னாள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, ஜூன் 27-

அவையில் இல்லாத ஒருவரை பற்றி நேரடியாகவோ, மறைமுகமாகவோ உறுப்பினர்கள் விமர்சனம் செய்யக்கூடாது. என தெரிந்தும் அவ்வாறான செயலில் ஈடுபட்ட முதல்வர் விஜய் மீது அவை உரிமை மீறல் நடவடிக்கையை சட்டப்பேரவை தலைவர் எடுப்பாரா.என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு சட்டப்பேரவை விதிப்படியும் மரபுபடியும் பேரவையில் இல்லாத ஒருவரை பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சட்டமன்ற உறுப்பினர்கள்வாய்மொழியாகவோ



அல்லது உடல் மொழியாகவோ விமர்சனமோ அல்லது கிண்டலோ, கேலியோ செய்யக்கூடாது என்பது சட்டப்பேரவை தலைவருக்கு தெரிந்திருக்கும்.

இது தொடர்பாக 22.6.2026 அன்று சட்டப்பேரவைத்தலைவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் உடல் மொழியாக அல்லது வாய்மொழியாக யாரையும் கிண்டலும், கேலியும் செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்த அடுத்த நாளே (23.6.2026) இதேபோல் வாய்மொழியாகவும், உடல் மொழியாகவும் அவையில் இல்லாத (முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின்) குறித்து தமிழக முதலமைச்சர் கிண்டலும்,கேலியும் செய்தது அவை உரிமைமீறல் இல்லையா? அவ்வாறான செயலில் ஈடுபட்ட முதல்வர் மீது தாமாக முன்வந்து அவை உரிமை மீறல் நடவடிக்கையை பேரவைத் தலைவர் எடுப்பாரா? தானே முதலமைச்சருக்கு இதுபோல் செயல்பட அனுமதித்தது நியாயமா? பதிலை எதிர்பார்த்து தமிழ்நாடே காத்திருக்கிறது, பேரவை தலைவரே.!

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு எக்ஸ் வலை தளத்தில் கேள்வி எழுப்பி உள்ளார்.